தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590


**ஆணை நாள் 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8475/SCIC/2023**

திரு மி. அருள்செல்வம் மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை.

பொதுத் தகவல் அலுவலர்/ ... பொது அதிகார அமைப்பு
கண்காணிப்பாளர் 'சி' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 15.02.2023 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். இனாம் செட்டில்மெண்ட் பதிவு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் மற்றும் பதிவுத்துறையின் சுற்றறிக்கை, பதிவுத்துறையின் விதிகளின் நகல், தந்தையின் பெயரில் உள்ள சொத்துக்களை

தனது மகனுக்கு இனாம் செட்டில்மெண்ட் குடுப்பதற்கு தேவையான ஆவணங்கள் என்பன போன்ற தகவல்களை 18 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் 27.03.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதனையடுத்து மனுதாரர் 08.05.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 8475/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 31.07.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 13.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 19.11.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொது அதிகார அமைப்பின் சார்பில் திரு வீ. ரமேஷ், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) (கூ.பொ), மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிவகங்கை மற்றும் திரு அ, ஸ்ரீராம், பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர் ‘சி’ பிரிவு, பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை ஆகியோர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்கள்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பதிவுத்துறைத்தலைவர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 15.02.2023 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவானது சட்டப்பிரிவு 6(3)ன் கீழ் 14.03.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக சிவகங்கை மாவட்ட பதிவாளருக்கு மாற்றம் செய்யப்பட்டு, அதன் விவரம் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான ஆவண நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொதுத் தகவல் அலுவலர் /மாவட்ட பதிவாளர், சிவகங்கை அவர்கள் மனுதாரருக்கு 13.03.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அதனைத்தொடர்ந்து 13.11.2024 மற்றும் 29.05.2025 ஆகிய

தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக மீண்டும் தகவல்கள் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களையும் விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

6. மேற்படி பொதுத் தகவல் அலுவலர்களால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க மனுதாரருக்கு ஆணையத்தால் வாய்ப்பளிக்கப்பட்டும் அவர் இன்றைய காணொளிக்காட்சி விசாரணைக்கு ஆஜராகவில்லையென்பதால், **இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 8475/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்),
மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
சிவகங்கை.

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர் 'சி' பிரிவு,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
எண்.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை 600 028

**<u>மனுதாரர்:-</u>**
திரு மி. அருள்செல்வம்,
3/368, ஆஸ்பத்திரி ரோடு,
பரமக்குடி 623 707,
இராமநாதபுரம் மாவட்டம்.

Copy to: File TK/PS